நாம் வாழும் உலகம் - பௌதிக உலகத்தை (Physical world)நமது உடல் நலத்திற்கு உரியதாக அமைத்துக் கொள்ள வேண்டும். இயற்கையிலும் அவ்விதம் தான் அமைந்திருந்தது. அண்டமும், பிண்டமும் ஐம்பூதங்களால் அமைந்தது ஐம்பூதங்களில் அடங்கிய மண், நிலம், நீர், காற்று, ஆகியவற்றின் நிலையை சிறிது சிந்திப்போம்.

நிலம்

மண் தூய்மையாக இருக்க வேண்டும். உயிரினங்கள் அதிக அளவில் இருக்க வேண்டும். எங்கும் பசுமையாக இருந்தால் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்கும். வெப்பக்காற்று வீசாது. உயிர்க்காற்று பெருக்கமடையும்

பூமியை பசுமையாக வைத்துக் கொள்ள நாம ஒவ்வொருவரும் அதிக அளவில் மரங்களை நட்டுவளர்க்க வேண்டும். மரங்களை வளர்ப்பதால் நாம் சுவாசிப்பதற்கு அதிக அளவு ஆக்ஸிஜன் (Physical world) கிடைக்கும். நாம் வெளிப்படுத்தும் சுவாசக்காற்றில் உள்ள கார்பன்டை ஆக்ஸைடை மரங்களை எடுத்துக் கொள்ளும்.

வேர் பாகஸ்கனால் நிலத்தில் நீர்பிடிப்பு சக்தி அதிகரிக்கும்.

கால் நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைக்கும் சுபாபுல், அகத்தி , ஆமணக்கு, வேம்பு , மருது.....

மண் அரிப்பு தடுக்கப்படும்

மண் வளம் பாதுகாக்கப்படும்

மழை வளம் அதிகரிக்கும்.

வேலை வாய்ப்பும் அதிகரிக்கும்

நீர்

'' நீரின்றி அமையாது உலகு '' நீர் நிலைகளின் நிலை என்ன? நீர் நிலைகளில் நாம் ஆடுமாடுகளை குளிப்பாட்டுகிறோம். பாத்திரங்களை விளக்கி நீர் எடுக்கிறோம். காலைக்கடனுக்குப் பின் சுத்தம்செய்வதும் அங்குதான். வீட்டு கழிவு வாய்க்கால்கள் தாமிரபரணி ஆற்றில் கலப்பதை நாம் இன்றும் பார்க்கலாம். வயிற்றுப்போக்கு, மஞ்சள் காமாலை, யானைக்கால், மலேரியா, சருமநோய்கள் போன்றவை பரவ நீர்மாசுபடுதல் ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

நிலத்தடிநீரின் நிலையை நாம் கவலையோடு சிந்திக்கவேண்டும். இன்று அடுக்கடுக்காக தொடர் வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் தோன்றுகின்றன. 300 - 500 அடி ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு நிலத்தடியில் நீர் உறிஞ்சப்படுகிறது. வீட்டைச் சுற்றி சுத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக சிமெண்ட் தரைகள் அமைக்கப்படுகின்றன. இச்செயலால் மழைநீர் நிலத்தடியில் சேமிக்கப்படாமல் வீணாக செல்கிறது. நாம் ஆழ்குழாய் கிணற்றில் எடுக்கும் நீர் நமது நிலத்தில் மழையின்போது சேமிக்கப்படும் நீரல்ல மற்றவர் நிலங்களால் சேமிக்கப்படும் நீரை நாம் பயன்படுத்துகிறோம். இது நியாயமா?

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கோடை மழையின் போது விவசாய நிலங்களில் கோடை உழவு நடைபெறும். வரப்புகள் ஏற்படுத்தி ஓடும் மழைநீரை நடக்கச் செய்து நிலத்தடியில் மழைநீர் சேமிக்கப்படும். ஆனால் இன்று....?

மழைநீரை சேமிக்க, சம உயர வரப்புகள் (Contour bunds), சிறிய ஓடைகளில் குறுக்காக மண் தடுப்புகள் (Check clams) கசிவு நீர் குட்டைகள் (Perwlation bunds) கோடை உழவு (Summer - plughing) குறுக்கு உழவு (Contour plouging) ஆகியவற்றை போர்க்கால அடிப்படையில் அமைத்து பயன்படுத்தவேண்டும்.

காற்று

இயந்திரங்களின் புகை மற்றும் தூசால் காற்று மாசுபடுகிறது. பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் டைஆக்ஸின் வெளிப்படுகிறது. டைஆக்ஸின் வெளிப்பட பிளாஸ்டிக்குடன் ஆக்ஸினை சேர்த்து எரித்தால் தான் டைஆக்ஸின் வெளிப்படும். வெறும் பிளாஸ்டிக்கை எரித்தால் டைஆக்ஸின் வெளிப்படாது என சிலர் கூறுகிறார்கள். ஆனால் நாம் எரிக்கும் கழிவுகளில் உள்ள பிளாஸ்டிக் சுத்தமாக, உலர் நிலையில் உள்ளதா? எனவே அவைகள் வெளிபடுத்தும் டைஆக்ஸினால் புற்றுநோய் நிச்சயம் அதிகரிக்கலாம்.

மேலும் விவசாயத்தில் அதிக அளவு தேவையற்ற சுற்றுப்புற சூழலை பாதிக்கக்கூடிய மருந்துகளை பயன்படுத்துகிறோம். இவைகள் நிலம், நீர் மற்றும் காற்றை மாசுபடுத்துகின்றன.

நோய் வந்தபின் மருத்துவர்களை நாடுவதைவிட நோய் ஏற்படாமல் இருக்க சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளலாமே!

அரசின் பொறுப்பு என்று ஒதுங்கி இருக்காமல் நல்ல உள்ளங்கள் இணைந்து ஆங்காங்கு மக்களை ஒருங்கிணைத்து அமைப்புகள் அமைத்து முயற்சிக்கலாமே! வாருங்கள்...

டாக்டர்.மு.மணிகண்டன், M.D.(s)

தங்கும் இட வசதி உண்டு.

நெல்லை சித்த வர்ம ஆலோசனை மையம்

சிறப்பு சிகிச்சை

பக்கவாதம், முடக்குவாதம், கழுத்து வலி, இடுப்பு வலி, மூட்டு வலி, எலும்பு முறிவு, தோல் நோய்கள், ஆஸ்துமா, குடல்புண், மூலம், தலைவலி மற்றும் நாள்பட்ட எல்லா நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.
வர்ம முறைப்படி, தடவு முறை, மூலிகை நீராவிக் குளியல், எலக்ட்ரானிக் டிராக்ஸன் ஆகிய சிறப்பு முறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

2, ரேனியஸ் தெரு, காளிமார்க் அருகில், முருகன்குறிச்சி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 2. போன் : 582555.

தண்ணீரில் 89% ஆக்ஸிஜன் உள்ளது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

''பூசணிக் கடுகு''

மரு.அ.மரிய ஜோசப், B.Sc., M.D(S)
துறைத் தலைவர் (பொறுப்பு), அறுவை மருத்துவத் துறை,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

சித்த மருத்துவத்தில் உள்புகட்கும் மருந்துகளை 32 வகையாகவும், புறப்பயனுக்காகப் பயன்படும் மருந்துகளை 32 வகையாகவும் பிரித்து வகைப்படுத்தியுள்ளமை நம்மை ஆச்சரியத்திலும் ஏன்? ஆழ்ந்த சிந்தனையிலும் ஆழ்த்தி விடுகின்றது. அப்பப்பா! உலகில் வேறு எந்த மருத்துவ முறைகளிலும் சொல்லாத அளவில் இத்தகைய வழிமுறைகளை சுமார் ஈராயிரத்திற்கும் முற்பட்ட காலத்தில் தெளிவாக வறையறுத்துக் கூறியிருக்கிறார்கள் நம் தமிழ் சித்தர்கள் என்றால் அவர்தம் அறிவுத்திறன் நம்மை வியப்பில் ஆழ்த்துவதோடல்லாமல் ஆழமாக சிந்திக்கவும் செய்கிறது.

ஒரே மருந்துப் பொருளைச் சாறாகவும், குடிநீராகவும், சுரசமாகவும் ,கற்கமாகவும், உட்களியாகவும், அடையாகவும், வெண்ணையாகவும், மணப்பாகாகவும், எண்ணையாகவும், பக்குவமாகவும், கடுகாகவும், நெய்யாகவும், தைலமாகவும், மாத்திரையாகவும், இளகமாகவும், தீநீராகவும், திராவகமாகவும்.... அம்மம்மா!!! இன்னும் அநேக வடிவங்களில் மருந்தாக்கிய அவர்தம் மதிநுட்பம் நம்மைத் திக்குமுக்காட வைத்துவிடுகிறது.

வெவ்வேறு வடிவத்திலான அம்மருந்துகளுக்கு ஆயுட்காலம் வேறுபடுவதோடல்லாமல், குணமாறுபாடும் ஏற்படுகிறது. இன்னும் ஒரு சில தயாரிப்பு முறைகளில் குணமாறுபாடு அடையாதநிலையையும் வியந்து நோக்காமலிருக்க முடியவில்லை.

செழித்தோங்கி வாழ்ந்துவரும் சித்த மருத்துவத்தில் இத்தகைய மருந்துகள் சில வழக்கொழிந்து வருதல் ஆர்வமிக்க சித்த மருத்துவர்தம் மனதை நெருடத்தான் செய்கிறது. இத்தகைய மருத்துவ முறைகளுள் சில பக்குவம், உட்களி, அடை, கட்டு, களங்கு, குருக்குளிகை, கடுகு என்பன தன்னிடத்தே அதிகமான ஆற்றல் பெற்றிருந்தும் மறைந்துவிட என்ன காரணம் என்பது இன்னமும் புதிராகவே உள்ளது.

சித்தர் நூல்களில் மேற்கூறிய மருத்துவ முறைகளை எவ்வாறு செய்ய வேண்டுமேனக் கோடிட்டுக் காட்டியும், அவை பெருவாரியான மருத்துவர்களால் பழக்கத்தில் கொண்டுவரப்படாமை வேதனை தருகிறது. '' கடுகு'' போன்றவை எவ்வாறு செய்யப்படுகிறது என்ற செய்தியே புதிதாகவும் செய்முறை விளக்கம் எங்குமே கிடைக்காமையும். இம்முறைகள் தற்கால சித்தமருத்துவர்களையும், சித்தமருத்துவத் தயாரிப்பாளர்களையும் விட்டு விலகியிருக்கச் செய்திருக்கலாம்.

சித்த மருத்துவக் கலைக்களஞ்சியமான T.V.சாம்பசிவம்பிள்ளை அகராதியிலுமே ''கடுகு'' மருந்துகள் பற்றியச் செய்திகள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

கடுகு : கடுகுச்செடி

கடுகுபதம் : கடுகைப் போல் திரளும் பதம்

கடுகுதிரளல் : தைலம் காய்ச்சும் பொழுது எண்ணெயில் கடுகு கூடும்படி காய்ச்சும் ஓர்விதப்பாகம்

இவ்வாறானச் செய்திகளைத் தான் பார்க்க முடிகிறது.

குணபாடம் தாது- சீவ வகுப்பில் அகமருந்து 32 என்ற வரிசைக்கிரம விளக்கத்தில் ''கடுகு'' என்பதற்கான விளக்கம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சில மருந்துச் சரக்குகளை நெய் முதலிய தைலப்பொருட்களுடன் சேர்த்துக் காய்ச்சி அச்சரக்குகள் திரண்டு வரும்போது எடுத்து அக்கடுகை உள்ளுக்கு உண்டு. அத்தைலத்தை மேலே பூசுவதாகும்.

இவ்விளக்கம் முற்றிலும் சரியானதாகத் தோன்றவில்லை.

''கடுகு'' தயாரிப்பு முறைகளைத் தேடிய எனக்கு ஒருசில கடுகு மருந்து செய்முறைகள் பழஞ் சுவடிகளிலிருந்து கிடைத்தது.

'' நவ்வல்கடுகு '', '' பூசணிக்கடுகு'', என்பன அவ்வாறு கிடைக்கப்பெற்ற மருந்துகளில் சில.

இக்கட்டுரையில் '' பூசணிக்கடுகு'', பற்றிய விளக்கத்தைப் பார்ப்போம்.

நந்திக் காயொன்று தோல்போக்கி நற்கண்டமிடு நாலுபடியப்பதாக நன்றாக வெந்து
நீர்ச்சுண்டிக் கரைத்ததில் நல்ல கல்கண்டு குளமுந்த வகையோரொன்று பலம் நாலதாகவே
தான்பொடித்தேக் கலந்து தரு சிங்கி மதுரமொடு நாகை மலரேலமும் சாத்திரபேதி கன்னார்

விந்தைதரு மரிசனமகடு கயமதாகமும் வெந்தியஞ் சிறுமூலமும்
விடய மிருசீரகம் திரிசாதிக் கொட்டமும்
மெய்சுவந்த சந்தனந்தான் வந்ததொரு மரகதியிலவங்கப் பட்டையும்
வரிசை சிறுதேக்குதாரம் வங்காளப் பச்சையுடனிருப்பத்து
நாலுமோர் வகைக்கு முக்கழஞ்சதாமே வகையாயிடித்தபின் தூள்கிண்டியுறவானபின்
வரிசைக் காராவின் நெய்தேன் வகை வகைக்கோர் நாழிசேர் கடுகு பதமதில்
மறுகத் தடை பதனம் தகையாது பூசணிக் கடுக்கெனப்பண்டுதர்
தரைமீதுரைக்க வரிதாம்
தனிலந்தி சந்தியோர் பாக்களவு மண்டலம் தவறாதருந்திவருகில்
வெகுதாக முடலெரிவு மூத்திராதி பிறமேகங்கிருச்சனமுடனே
வெட்டைச் சலமேக மெல்லுருக் கியுள்ளுருக்கியும்.
மேவுபலவர்ணமாக துகையிலா தூனுருக்கி வருகின்ற மேகமும்
தூங்கு செங்காமாரியும் சோம்பல் ரெத்த பித்தமொடு மஞ்சளெனும்
பித்தமும் சுகமாகும் பிவாதனமே.

செய்முறை விளக்கம்

எண்.1. வெண்பூசணிக்காயின் தோலையும் உள்ளிருக்கும் விதைகளையும் நீக்கிவிடவும். நன்கு கழுகியபின் துண்டு துண்டாக வெட்டி உரலிலிட்டு இடித்துச்சாறு பிழியவும். இவ்வாறு பிழிந்தச்சாறு சுமார் 5 லிட்டர் இருக்க வேண்டும்.

எண் 2. சீனாகல்கண்டு, மாச்சீனி போன்றவற்றை வகைக்கு 240 கிராம் வீதம் எடுத்துக் கரைத்து வடிகட்டவும்.

எண்.3 கற்கடக சிங்கி, அதிமதுரம், சிறுநாகப்பூ, ஏலக்காய், சாத்திரபேதி, பஞ்சிக்கல் நார், மஞ்சள், கடுகு, காயம், ஓமம், வெந்தயம், திப்பலிவேர், அதிவிடயம், சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி , கிராம்பு, கோஷ்டம், சிவப்பு சந்தனம், மரகதி, இலவங்கப்பட்டை, சிறுதேக்கு, சுத்தித்த அரிதாரம், வங்காளப் பச்சை(பச்சிலை) ஆகியவற்றை வகைக்கு 15 கிராம் வீதம் எடுத்துச் சூரணித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

எண்.4. பசுவின்பால் - 500மி.லி

எண்.5. நெய் - 500 மி.லி

எண்.6. தேன் - 500மி.லி.

தயாரிப்பு விளக்கம்.

எண் ஒன்றில் கூறிய சாறுடன் எண்2ல் கூறிய சரக்குகளைக் கலந்து காய்ச்சவும். மாச்சீனி, கல்கண்டு முதலியன நன்கு கரைந்து உறவானதும். எண்.3ல் கூறிய சூரணங்களைக் கொட்டி வெந்து வரும்போது எண்.4ல் கூறிய பசுவின்பாலை ஊற்றி அதுவும் சுண்டி குழம்பு பதமாகச் செய்யவும், பின் எண்5 மற்றும் எண் 6ல் கூறிய நெய், தேன் போன்றவற்றைக் கலந்து கடுகுதிரள் பதத்தில் இறக்கிவைத்துப் பத்திரப்படுத்தவும். இது லேகியபதம் போன்ற நிலையில் இறுகி இல்லாமல் எண்ணெய் போன்று இளகி காணப்படும்.

குழம்பு பதத்திற்குப்பின் நெருப்பின் வேகத்தைக் குறைத்து விடவும். தீபாக்கினியே போதுமானது. அவ்வாறு இல்லாமல் அதிகமான நெருப்பு மூட்டிப்''பூசணிக் கடுகு'' தயாரித்தால் தேனின் குணம் சேதாரமாகிவிடும்.

மருந்தளவு : 1 தேக்கரணடி முதல் ஒரு மேசை கரண்டிவரை நோயின் வன்மையையும் நோயாளியின் வன்மையையும் கருத்தில் கொண்டு 48 நாட்களாகிய ஒரு மண்டலம் வரை காலை மாலை உணவுக்கு முன் வழங்கவும்

தீரும் நோய்கள் : எடல் எரிச்சல், சீறுநீர் எரிச்சலுடன் கழிதல், மேகநோய்கள், வெட்டைநோய், சிறுநீருடன் மேகம் கழிதல் , எல்லுருக்கு, உள்ளுருக்கி. பலவர்ண தீட்டு ஒழுக்கு, செங்காமாரி, இரத்தபித்தம், பித்த வாந்தி முதலான நோய்களும், நோய்க் குணங்களும் குணமாகும்.

குணபாடம் சீவ வகுப்பில் குறிப்பிட்டுள்ளது போன்று கடுகை உண்டு நெய்யைப் புறப்பயனுக்குப் பயன்படுத்த வேண்டும் எனப் '' பூசணிக் கடுகில்'' பிரித்துக் குறிப்பிடாததை வாசகர் கவனத்தில் கொள்ள வேண்டும். ' கடுகுதிரள் ' பதத்தில் மருந்தை எடுத்துப் பத்திரப்படுத்துவதால் '' கடுகு'' என்ற மருந்தாகக் கொண்டுள்ளனர். தாயாரிப்பின்போது நீர்த்துவம் முற்றிலும் நீங்கச் செய்து கவனமாக '' கடுகு'' மருந்துகளைத் தயார் செய்து பத்திரப் படுத்த வேண்டும். கவனக் குறைவாக தயாரித்தால் மிக விரைவில் மருந்து பூசாண மேறிக் கெட்டுவிடும்.

மறைந்து கிடக்கும் '' கடுகு '' , '' பக்குவம்'' போன்ற பிற மருத்துவமுறைகளையும் வெளிக் கொணர முயற்சிகள் மேற்கொள்ள சித்த மருத்துவர்களாகிய நாம் கடமைப்பட்டுள்ளோம் என்பதை உணர்வோம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஏட்டில் எழுதி வைத்தான்

(வெளிவரப்போகும் ஆசிரியரின் மருந்து வாகடம் என்னும் நூலிலிருந்து)

மரு.பொ.இரா.இராமசாமி, எம்.டி.(சி).,

இணைப் பேராசிரியர்,

அரசினர் சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை.

''ஏட்டில் எழுதி வைத்தான்
எழுதியதைச் சொல்லி வைத்தான்
கேட்டவரைக் காணோமடா - இறைவா
கூட்டிச் சென்ற இடமேதடா?''
கண்ணதாசனின் திரைப்படப் பாடல் இது.

இந்தப் பாடலைக் கேட்டும் போதெல்லாம் சித்த மருத்துவத்தின் இன்றைய நிலைதான் நினைவிற்கு வருகிறது.

எத்தனையோ மருத்துவ உண்மைகளை எல்லாம் - மருந்துகளின் மேன்மையை எல்லாம் சித்தர்கள் என்றோ சொல்லி வைத்து சென்றுவிட்டார்கள். அவர்கள் ஏட்டில் எழுதி வைத்தனடி எழுதியதைச் சொல்லி வைத்ததை - இன்று கேட்பவரைக் காணோமடா என்று மாற்றிப்பாடத் தோன்றுகிறது.

பாரதி பாடுவான்,

''மெல்லத் தமிழ் இனிச் சாகும் - அந்த
மேலை மொழிகள் புவிமிசை ஓங்கும்''

பாரதி சொன்னது போல் தமிழுக்கு மட்டுமா இந்த நிலை? தமிழ் மருத்துவத்திற்கும் தான்? தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்கள் ஒருமுறை ஏடுகள் சேகரிக்கச் சென்றபோது ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசியைத் தன் கண்ணால் பார்த்திருக்கிறார். படித்திருக்கிறார். பின்னால் படியெடுத்துக் கொள்ளலாம் என்று அவசர அலுவலின் காரணமாகச் சென்று விட்டார். சில மாதம் கழித்து வந்த பார்த்தபோது ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான அது கரையானால் அரிக்கப்பட்டு விட்டது. அழிக்கப்பட்டுவிட்டது.இப்படிக் காலத்தால், கடலால், கரையானால் அழிந்து போன அற்புதங்கள் எத்தனை? சித்த மருத்துவத்தைப் பொருத்தவரை அது ஒரு தொடர்கதை.

மிகச்சிறந்த உயர்ந்த மருத்துவ ஏடுகள் எல்லாம் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் அழிந்து கொண்டிருக்கின்றன.

''பொழுதெல்லாம் எங்கள் செல்வம்
கொள்ளைகொண்டு போகவோ
அழுது கொண்டிருப்போமோ?'' என்பான் பாரதி.

ஏட்டில் இருக்கும் விலைமதிப்பற்ற சித்த மருத்துவச் செல்வம் இன்றும் சிதிலமடைந்து கொண்டுதான் இருக்கிறது. அழிந்து கொண்டுதான் இருக்கிறது. கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், காலிருந்தும் முடவர்களாய் அதைக் காக்க மறந்து இருக்கிறோம்.

இது வேளை.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இப்போதும் விழிக்கவில்லை என்றால் அந்தப் பொக்கிஷங்களைக் காக்கத் தவறிவிட்டால் அது இந்த மருத்துவத்திற்கு, நாட்டிற்கு, சமுதாயத்திற்கே செய்யும் துரோகம்.

அகர வரிசைப்படி நோய்களை, மருந்துகளை அவற்றிற்கான மூலிகைகளை வகைப்படுத்திய ஏடொன்று எனக்குக் கிடைத்தது.

அற்புதத்திலும் அற்புதமான ஏடென்றுதான் அதைச் சொல்ல வேண்டும். அதுதான் உண்மையும் கூட. சான்றிற்குச் சொல்வதென்றால் கொட்டமடக்கி என்ற மூலிகையைப் பற்றி அந்த ஏடு இப்படி குறிப்பிடுகிறது.

ஆடும் சரக்கு 64ன் கொட்டம் அடக்கும் என்பதால் இதன் பெயர் கொட்டமடக்கி. ஆடும் சரக்கு 64 என்பது - 64 வகை பாடாணங்கள். கொட்டம் என்ற சொல் அதன் வேகத்தையும் வீரியத்தையும் குறிக்கும். கொட்டமடக்கி என்ற மூலிகை - சித்ர மூலம் என்ற கொடிவேலி.

கொடிவேலி பாடாணங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் தகவலை இப்படி குறிக்கிறது அந்த ஏடு.

கணப்பச்சிலை என்ற மூலிகையைக் குறிப்பிடும்போது,

''ஓரிதழ்த்தாமரைக்கும் கணப்பச்சிலை என்ற பேருண்டு. ஆனால் வாகடப்படிக்கான கணப்பச்சிலை ஓரிதழ்த்தாமரை இல்லை என்று கூறிவிட்டு அது எப்படி இருக்கும் என்ற தக அமைப்பையும் விரிவாக கூறுகிறது.

அதே போல் சித்த மருத்துவர்களுக்குப் பூனை வணங்கி என்ற பெயரைக் கேட்ட உடனேயே குப்பைமேனிதான் நினைவிற்கு வரும். ஆனால் வாகடப்படிக்கான பூனைவணங்கி குப்பைமேனி இல்லை என்று மறுதலிக்கிறது இந்த ஏடு. அது எப்படி இருக்கும் என்பதையும் விவரிக்கிறது. அதே போல் சித்த மருத்துவர்கள் அறிந்திருக்க வேண்டிய பெரு மருந்துகளில் முக்கியமானது அகத்தியர் குழம்பு. மாறுபாடுள்ள மூன்று வகையான அகத்தியர் குழம்பைப் பற்றி குறிப்பிடுகிறது இந்த ஏடு. அதில் ஒரு அகத்தியர் குழம்பில் காந்தம் சேர்க்கப்படுகிறது. அதில் காந்தம் ஏன் சேர்க்கப்படுகிறது என்ற விபரத்தை குறிப்பிடும்போது குழம்பு முறைக்கெல்லாம் தாய்ச்சரக்கு ரசம் என்றாலும் இங்கே காந்தம் தாய்ச்சரக்காகச் சேர்க்கப்படுவது ஏனென்றால் அது குரு மருந்து என்பதனாலேயே என்று விளக்கமும் சொல்கிறது. இப்படி பல சிறந்த தகவல்களை அகர வரிசைப்படி தொகுத்துள்ள இந்த ஏடு விரைவில் புத்தகமாக வெளிவர உள்ளது. இன்னுமொரு ஏடு சிறந்த மருந்து செய்முறைகளைத் தன்னகத்தே கொண்டது.

எடுத்துக்காட்டிற்கு ஒரு முறை

<u>இராமபாண மெழுகு</u>

இதாரம், இரசம், ஊசிக்காந்தம், காயம், வசம்பு, ஈருண்ணி, மஞ்சள், அமுக்கரா, இந்து, ஓமம், எள், துருசு, துத்தம், சாதிக்காய், மாசிக்காய், கோஷ்டம், சித்திர மூலம், சேங்கோட்டை, கார்கோல், எட்டி விதை வகைக்கு ஒரு களஞ்சு. கல்லுரலில் இரும்பு உலக்கையால் ஒரு சாமம் இடித்து மருந்தெடை வெல்லம் சேர்த்து மெழுகு போல் இடித்து சுண்டை அளவு 3 நாள் தர கிரந்தி, மேகம், சர்வ சூலை, வாதம், வாய்வு, அரையாப்பு, குட்டம், பிளவை, லிங்கப்புற்று, மூலம், கன்னோசி, பெண்கிரந்தி, அண்டவாய்வு, பித்தபாண்டு 5ம் தீரும். பத்தியமில்லை. அகப்பத்தியம்.

பாட்டுக்கொரு புலவன் பட்டுக்கோட்டை சொல்வான்.

''சித்தர்களும் யோகிகளும்
சிந்தனையில் ஞானிகளும்
எத்தனையோ உண்மைகளை
எழுதி எழுதி வச்சாங்க
எல்லாந்தான் படிச்சீங்க
என்ன பண்ணிக் கிழிச்சீங்க?''

என்ன செய்யப்போகிறோம்? என்று செயல்படப்போகிறோம்? எப்படி செயல்படப்போகிறோம்?

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE



மயிலாசனம்

டாக்டர்.ஆர்.எஸ்.இராமசுவாமி, எம்.டி.(சி)
விரிவுரையாளர்,
உடல் தத்துவம், சிறப்பு மருத்துவம் & யோகா,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

சித்தர்கள் உடலையும் மனத்தையும் நலமாகவும் வளமாகவும் பராமரிக்க எண்ணிலா ஆசனங்களை வடிவமைத்து நமக்கு அருளியிருக்கிறார்கள். இன்றைய கால வேகத்தில் அவற்றையெல்லாம் பற்றி சிந்திக்கவும் நடைமுறைப்படுத்தவும் இயலாது. எனினும் குறிப்பிட்ட சிலவகை ஆசனங்களை அன்றாடம் சிறிது நேரம் ஒதுக்கி செய்து வருவது நலம் தரும். இக்கட்டுரையில் மயூராசனம் அல்லது மயிலாசனம் (Peacock Pose) பற்றி பார்ப்போம்.



மயிலாசனம் :

காலையில் பல் துலக்கி விட்டு மல சலம் கழித்துவிட்டு வெறும் வயிற்றில் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள இடத்தில் சமதளத்தில் ஒரு விரிப்பின் மீது செய்ய வேண்டும். முதலில் குப்புறப்படுத்துக் கொள்ள வேண்டும். கைகளைப் பக்கவாட்டில் வைத்து உள்ளங்கைகளைத் தரையில் கைவிரல்கள் கால்விரல்களை நோக்கி இருக்குமாறு பதித்து, தலை, நெஞ்சு, வயிற்றுப்பகுதிகளைத் துக்க வேண்டும். பின்னர் முழங்கைகளை மடக்கி உடலோடு நெருக்கி வயிற்றுப்பகுதியிலும் விலாப்பகுதிகளிலும் முழங்கை மூட்டுக்களும் மேற்கையின் பின்புறமும் பதிந்து இருக்குமாறு வைத்து பின்னர் இரு கால்களையும் துக்கி உடலை நேராக வைத்த நிலையிலும், உடல் பாரம் முழுவதையும் இரு கைகளிலும் வயிற்றுப்பகுதியிலும் ஏற்றிய நிலையிலும் 2-3 நிமிடங்கள் வைத்திருக்கலாம். பின்னர் மெதுவாகக் கால்களை இறக்கி, கைகளைத் தளர்த்தி உடலையும் தலையையும் இறக்கி மீண்டும் குப்புறப்படுக்கும் நிலைக்கு வர வேண்டும். சிறிது ஓய்வு எடுத்துவிட்டு எழுந்திருக்கவும். சுவாசம் இயல்பாக நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

பயன்கள் :

வயிற்றுப்பகுதி, தோள், முழங்கை, மணிக்கட்டுப் பகுதிகளில் உள்ள தசைகள் வலிமை பெறும். தலைப்பகுதிக்குக் குருதியோட்டம் அதிகரிக்கும். செரிமான ஆற்றல் பெருகும். நீரிழிவு நோய் கட்டுப்படும்.

எச்சரிக்கைகள் :

யோக மருத்துவரின் ஆலோசனையின் பேரிலேயே இவ்வாசனத்தைப் பெரியவர்கள் செய்ய வேண்டும். இரத்தக் கொதிப்பு (Hypertension), கண் மிகுநீரழுத்த நோய் (Glaucoma) ஆகிய நோயுள்ளவர்கள் இவ்வாசனத்தைத் தவிர்த்தல் நல்லது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

BABY 'S PATTERN OF GROWTH

Dr. R. LAKSHMI, M.D(S) Lecturer
Govt. Sidha medical College
Palayamkottai

Pregnancy is a period of excitment, expectancy and a bit of anxiety and even fear, and specially if it is the first pregnancy. Your baby is a marvel of your creation and his birth is an exciting moment. His or her first skin contact with you sends a thrill through you. His smile, his gestures and even a yown thrills you.

It is every mother's duty to look after their baby's growth promptly. Every pattern of Grwoth must be known by every mother. In this way a baby weighs about three kilo grams at birth and loses 150 - 200gm in the first rapidly and gains about 25 to 30gm a day for the first three months and a little less rapidly after that. The widly accepted formula that the baby doubles his birth weight at five months and trebles it at one year.

The length of the baby at birth is 48 to 50 cm and at one year of age becomes one and a half times that. It has to be given below.

Average weight and height increments during the first five years.

Age	Weight increment per week
0-3 months	200 gm
4-6 months	150 gm
7-9 months	100 gm
10-12months	per year
1-5 years	20 Kgm

Age	Length increment per year
1st year	25 cm
2nd year	10-12 cm
3rd year	7-9 cm
4th year	6-8 cm
5th year	6-8 cm

You should remember that these are averages and all babies will not conform to this pattern. There is a wide range with in which a baby's growth is considered normal.

Expected weights and heights also known by every mother. It must be calculated to the well nourished Indian children at various ages. What is more important is the growth rate of the child and the direction of his growth curve rather than any one weight.

Average weights of well nourished Indian children at different Ages.

Age	Weight in Kg	
	Boys	Girls
Birth	3.0	2.9
6 Months	7.5	7.0
1 year	9.5	9.0
2 years	11.5	11.0
3 years	14.0	13.5
4 years	15.5	14.5
5 years	17.5	16.5

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

These are somewhat lower than the weights of American children probably because of racial and ethnic differences. Of for greater importance than his weight and height at a particular point of time are his wellbeing abundant energy, happiness. freedom from lassitude and freedom from infection. Any child who eats well, runs around and plays and its happy is a healthy child. unfortunately indian children in many places do not grow normally because of inadequate food and poverty.

Average Heights of well nourished Indian children

Age	Height in cm	
	Boys	Girls
1 year	75.0	72.5
2 years	85.0	83.0
3 years	94.0	92.0
4 years	100.0	99.0
5 years	107.0	105.0

Even though the doctor or the clinic where you take the baby for immunization and advice will keep a record of the vaccine given and the illness treated, it is better for you to keep a record of it as well. The weight is charted in a curve so you can judge from the direction of the curve whether or not your child is being well and gaining.

The shops are full of a variety of tonics and many mothers insist that the doctor must prescribe one so that the child eats better or grows faster. Tonics are by and large a waste of money. The child needs enough of a balanced diet for growth and health and not tonics similarly various drugs to make your child taller are also useless and there is no need for these at all.

Some anabolic harmones are positively harmful and should not be given to the child to promote his growth. Alright now every mother is eligible to care for their baby's growth pattern according to the above tips.

ஸ்ரீராம் சித்தா கிளினிக்

652, சக்திரோடு, ஜி.பி.மருத்துவமனை பஸ் ஸடாப் அருகில், காந்திபுரம், கோவை - 12. ✆ 521150

சித்த மருத்துவ பட்டதாரிகளை கொண்டு சித்த மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சை நவீன அணுகுமுறையில் வழங்கப்படுகிறது.

சிறப்பு சிகிச்சைகள்

❖ குழந்தையின்மை(Infertility) ❖ சோரியாசிஸ் (செதில் உரிநோய்) ❖ ஆஸ்துமா ❖ சைனசைட்டிஸ்
❖ கரப்பான் மற்றும் அனைத்து தோல் நோய்கள் ❖ வெண்படை ❖ மூலம் (Piles) ❖ எய்ட்ஸ் (Aids)
❖ நீரிழிவு நோய் ❖ அடுக்கு தும்மல் போன்ற நோய்களுக்கு சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது.

மருத்துவ ஆலோசனை இலவசம்.

With Best Compliments From

✆ 500139

J.B. Medicals

1-D, Salai Street, Vannarpettai, Tirunelveli - 3.

ஒரு பெண், விருப்போ, வெறுப்போ அடைகிறபோது எதையும் செய்யத்துணிந்துவிடுகிறாள்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வெள்ளைப் பூண்டு

Dr.K.MOORTHY, M.D. (s)
Asst. Lecturer
Dept. of Gunapadam (Mooligai)
Govt. Siddha Medical College, Palayamkottai.

முன்னுரை :

நாட்டில் பல வகை மூலிகைகள் உள்ளன. சில வகை மூலிகைகள் நம் அன்றாட உணவில் சேர்த்து கொள்ளப்படும்.

''மருந்தே உணவு, உணவே மருந்து'' என்பதற்கு இணங்க நாம் தினமும் நம் உணவில் சேர்த்து கொள்ளும் எளிய மூலிகைகளை சில அரிய வகை நோய்களுக்கு பயன்படுத்தி வருகின்றோம். அவற்றில் எந்த விதமான கனிமபொருள்கள் உப்புகள், சத்துக்கள் உள்ளன என்று தெரிந்து பயன்படுத்தினால் உடல் நோய்களில் இருந்து தடுக்கப்படுவதுடன் நோய் வராமல் பாதுகாப்பாக இருக்கலாம். வெள்ளை பூண்டு அதனால் தீரும்நோய்கள், பயன்படுத்தும் முறை இவற்றை காண்போம்.

தாவரவியல் பெயர் :

Allium sativum

வேறு பெயர்கள் :

இலசுனம், காயம், உள்ளி பூண்டு, வெள்வெங்காயம்.

இஃது இந்தியாவின் எல்லா பாகங்களிலும் பயிராகும் ஒரு பூண்டு. நீலகரி பூண்டு மிகவும் பெயர் பெற்றது.

இதற்கு பசித்தீத்துாண்டி, வெப்பமுண்டாக்கி, கோழையகற்றி, புழுக்கொல்லி, சீறுநீர்ப்பெருக்கி, உடல்தகற்றி, உரமாக்கி, அகட்டுவாய்வகற்றி செய்கைகள் உண்டு.

இதைச் சிறிய கட்டிகள், செவிடு , நாட்பட்ட இருமல், இரைப்பு , வயிற்றுப்புழு , இவைகட்கும், முப்பிணி, வளிநோய்கள், ஐயத்தலைவலி, வாய்நோய், நீரேற்றம், சீதக்கழிச்சல், மூலம் இவைகட்கும் கொடுக்கலாம்.

பூண்டில் அடங்கியிருக்கும் சத்து பொருள்கள் (தோராயமாக)

PROTEIN - 6.3gm, FAT - 0.1gm, MINERALS - 1.0gm, FIBRE - 0.8gm, CARBOHYDRATES - 29.8gm, ENERGY - 145Callorie, CALCIUM - 30mg, PHOSPHORUS - 310mg, IRON - 1.3mg, THIAMINE - 0.06mg, RIBOFLAVIN - 0.23mg, NIACIN - 0.4mg, VITAMIN C - 13mg.

எளிய மருந்துகள் :

இளைப்புக்கு,

வெள்ளாட்டுப் பால் - 500 மி.லி
வெள்ளைப் பூண்டு - 250 கி

இதனை அரைத்து வற்றலாக காய வைத்து உணவுக்கு முன் அருந்தி வெந்நீர் அருந்தவும் 20 நாட்கள்.

கடல் நீரில் உள்ள உப்பின் அளவு - 35%

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மலட்டுத் தன்மைக்கு,

வெள்ளைப் பூண்டுடன், மிளகு, வேப்பங்கொளுந்து, ஆண்வசம்பு இவைகளைச் சம அளவு எடுத்து அரைத்து மாதவிலக்கு மூன்று நாட்களிலும் ஒரு கோலிகுண்டு அளவு விழுங்கி வந்தால் பெண்களின் மலட்டுத் தன்மை நீங்குகிறது.

சூதக வலிக்கு,

பூண்டுடன் மிளகு , துத்தி இலை இவைகளை வகைக்கு 40 கிராம் எடுத்து, அத்துடன் 10 கிராம் வசம்பு சேர்த்து நன்றாக அரைத்து , சூதக காலத்தில் சாப்பிட்டு வரவேண்டும். மூன்று நாட்களும் சாப்பிட வேண்டும் அதன் பிறகு சூதகவலி வரவே வராது.

குழந்தை உண்டாகாதவர்களுக்கு - கர்ப்பம் தரிக்க,

பூண்டுடன் கொச்சக்காய் இலை சேர்த்து அரைத்து சிறு எலுமிச்சம்பழ அளவு உள்ளுக்குச் சாப்பிட்டு வந்தால் எளிதில் கர்ப்பம் தரிக்கும்.

உள்நாக்கு வளர்ச்சி நீங்க

5 கிராம் வெள்ளைப் பூண்டைத் தோலுரித்துக் கொள்ளவும். சலவைத் துணியில் முடிச்சுப் போல் கட்டி மரச்சுத்தியால் தட்டிச்சாறு எடுக்கவும்.

அந்தச் சாற்றை ஆள் காட்டி விரலால் தொட்டு உள்நாக்கில் தடவ, உள்நாக்கு வளர்ச்சி தடைப்படும்.

இரத்தக் கடுப்பு நீங்க,

வெள்ளைப் பூண்டுடன் விளாம் பிசினை வைத்து அரைத்து தயிரில் கலந்து சாப்பிட்டால் இரத்தக் கடுப்பு குணமாகும்.

கரப்பான் நீங்க,

பூண்டுடன், கடுக்காய் , எருக்கு வேர்ப்பட்டை, மருக்காரை, வட்ட கிலுகிலுப்பை, வேலிப்பருத்தி இவைகளை வகைக்கு 70கி எடுத்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி, மூன்று நாட்கள் தடவி வந்தால் கரப்பான் சரியாகிவிடும்.

பூச்சி வெட்டிற்கு,

சுத்தமான தேனில் வெள்ளைப் பூண்டைப் பொடி செய்து போட்டுச் குழைத்து பூச்சி வெட்டுப்பாகத்தில் தேய்த்து வந்தால் சில நாட்களில் அந்த இடத்தில் முடி வளரத் தொடங்கிவிடும்.

பவுத்ர கட்டிக்கு,

மூலநோய்கள் தொடர்பாக பவுத்திரக்கட்டி ஏற்படுவதுண்டு. ஆசனவாயில் ஏற்பட்டு மிகவும் தொல்லை கொடுக்கும். இதற்கு வெள்ளைப்பூண்டு, தும்பை வேர், வேளைக்கீரை இவை மூன்றையும் சேர்த்து அரைத்து அந்த கட்டியின் மேல் வைத்துக் கட்டிவரவும். சில நாட்களில் பழுத்து அது உடைந்துவிடும். அதன் பிறகு ஆறிப்போகும்.

முகவாத சன்னிக்கு,

வெள்ளைப்பூண்டு, மஞ்சள், இலுப்பைப் புண்ணாக்கு, சுக்கு, மிளகு, சீரகம், மரமஞ்சள், சந்தனம் இவைகளைச் சம எடை எடுத்துப் பொடி செய்து வெள்ளைத் துணியில் வைத்துத் திரியாகத் திரித்து, ஒரு நுனியைத் தீயிற் காட்டி அதில் வரும் புகையை மூக்கினால் உறிய வேண்டும். அப்பொழுதுதான் முகவாத சன்னிப் போகும்.

இம் மருந்துகளை முறைப்படி உண்ண வேண்டும். முறை மீறி உண்டால் தீங்கு உண்டாகும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வாழ்நாள் விவரம் (ஆயுள் காலம்)

மரு.வி.ராணி மூர்த்தி M.D.(Siddha)
உதவி விரிவுரையாளர்,
நோய் நாடல் துறை,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

முன்னுரை :

மனிதனின் வாழ்நாள் என்பது பிறந்தது முதல் வாழ்ந்து இறக்கும் வகையில் உள்ள காலம். **''பேறு இளமை இன்பம் பிணி முப்பு சாக்காடு இவை ஆறும் கருவில் அமைப்பு''** என்பதற்கிணங்க ஒரு மனிதனின் பேறு, இளமை காலம், அவன் இன்ப துன்பங்கள் அவனுக்கு உண்டாகும் பிணி(நோய்கள்), முதுமைகாலம், அவன் இறப்பு இவை எல்லாம் கருவில், இந்த குழந்தை உற்பத்தி ஆகும் போதே விதிக்கப்பட்டவிதி ஆகும்.

இக்கட்டுரையில் எல்லா பருவங்களில் உண்டாகும் நோய்கள் அனைத்தையும் கூற முடியாது. சிலசில நோய்கள் மட்டும் இங்கு எடுத்து இயம்பட்டு உள்ளது.

வாழ்நாள் விவரமும் உண்டாகும் நோய்களும் :

கரு உண்டாகும் விதம் :

''நாதமுடன் விந்தவுங் கருக்குழியில்
நலமாக பாய்ந்தவுடன் கருவுமாச்சு
பேதமிலா வுருவாகி திரளலாச்சு.
பின்பு நாளுக்கு நாள் காயமாச்சு
மாதமது பத்தானால் விழவுமாச்சு
மண்ணின் மேவுல் வந்தவுடன் பசளையாச்சு''

என்பது போல நாதமும் வந்ததும் கருக்குழியில் சந்தித்தவுடன் கருவுருவாகி நாளுக்குநாள் திரண்டு வளர்ச்சி அடைந்து உயிருடன் கூடிய உடல் பூரண வடிவம் பெற்று 10வது மாதத்தில் ஜெனனமாகி பூமியில் பிறந்த உடன் குழந்தை என்னும் பெயருமாகும் என அறிகின்றோம்.

இக்குழந்தை பருவம் முதல், அது படிப்படியாக பருவ நிலைகளைக் கடந்து மரணமடைகின்றது. இவ்வாறு குழந்தை பிறந்தது முதல் மரணமடையும் காலம் வரை உள்ள இடைப்பட்ட காலத்தையே வாழ்நாள் விவரம் என்கின்றோம்.

பருவங்கள் :

குழந்தைகள் பிறந்தது முதல் அவர்களின் வளர்ச்சி நிலையை பற்றி கூறும்போது பல பருவங்களாக கூறப்படுகின்றது.

குழந்தை பிறந்தது முதல் 6 மாதம் வரை	-	காப்புபருவம் .
7 முதல் 12 மாதம் வரை	-	செங்கீரை பருவம்.
1வருடம் முதல் 1 1/2 வருடம் வரை (முத்த பருவம்)	-	தாலாட்டு பருவம்
1 1/2 வருடம் 2 வருடம் வரை	-	சப்பாணி பருவம்
2 1/2 முதல் 3 வருடம் வரை	-	வருகை பருவம்
3 முதல் 3 1/2 வருடம் வரை	-	அம்புலிபருவம்
3 1/2 முதல் 4 வருடம் வரை	-	சிற்றில்பருவம்
4 முதல் 4 1/2 வருடம் வரை	-	சிறுபறை பருவம்
4 1/2 முதல் 5 வருடம் வரை	-	சிறுதேர் பருவம்.

காப்பு பருவம் 1 முதல் 6 மாதம் :

இக்கால கட்டத்தில் குழந்தை பிறந்தது முதல் 6 மாதம் வரையில் குழந்தைக்கு புறக் காரணங்களினால் சீதோஷ்ண நிலைகள், வசிக்கும் இடம், தாயின் உணவு பழக்கம், சுற்றுபுற சூழல், வாழும் முறைகள் - இவற்றின் காரணமான பல விதமான நேரங்கள் வருவதற்குகான காரணங்கள், தொற்றுகள் அதிகம் இருப்பதால் மிகவும் பாதுகாப்பாக குழந்தைகளை வளர்க்க வேண்டிய பருவம்.

செங்கீரை (அ) முத்த பருவம் (7 முதல் 12 மாதம்) :

குழந்தையை தாய் வாரி அணைத்து முத்தமிட்டு மகிழும் பருவம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தாலாட்டு பருவம் (1 முதல் 1 1/2 வருடம்) :

குழந்தைகள் தாயின் குரலை அடையாளம் கண்டு கொள்வதற்காகவும் தூங்குவதற்காகவும், தாய் தாலாட்டு பாடும்போது குழந்தைகளுக்கு நல்ல அறிவுள்ள கதைகளை சொல்லி தாலாட்டு பாடி தூங்க வைக்கும் பருவம்.

சப்பாணி பருவம் 1/2 முதல் 2 வருடம் :

இப்பருவத்தில் குழந்தைகள் நன்கு உருண்டு பிரண்டு எழுந்திருக்கும். எழுந்து நிற்கும் முன் அதாவது நடந்து வருவதற்கு முயற்சி செய்து தோற்றவுடன், கால்களை சப்பாணி போட்டு வேகமாக நடந்து வரும் பருவம்.

வருகை பருவம் (2 1/2 முதல் 3 வருடம்) :

தாய் குழந்தையை தன்னிடம் வரும்படி அழைக்கும் பருவம். குழந்தைகள் நடப்பதற்கு முயற்சி செய்ய தாய் அழைக்கும் பருவம்.

அம்புலி பருவம் (3 - 3 1/2 வருடம்) :

அம்புலி என்றால் நிலா. குழந்தைக்கு தாய் அன்னம் ஊட்டும்போதும் பாலும் சோறும் ஊட்டும் போதும் பல விதமான கதைகளை சொல்லியும், நிலவை வரும்படி அழைத்தும் சோறு ஊட்டும் பருவம்.

சிற்றில் பருவம் (3 1/2 முதல் 4 வருடம்) :

சின்னஞ் சிறார்களை சேர்ந்து விளையாட அழைக்கும், அழைத்து விளையாடும் பருவம். மணல் வீடு கட்டி விளையாடும் பருவம்.

சிறுபறை (4 - 4 1/2 வருடம்) :

சிறுவர்கள் சிறிதாக பறை முதலிய கருவிகளை தட்டியும் அதனால் உண்டாகும் ஒலியை ரசித்து விளையாடும் பருவம்.

சிறுதேர் பருவம் (4 1/2 - 5 வருடம்) :

சிறிய தேர் முதலிய பொருட்களை செய்து, அதை ஓட்டி மகிழும் பருவம்.

மேலும் பருவநிலைகள் ஆண், பெண் குழந்தைகளுக்கு தனித்தனியாக கூறப்பட்டுள்ளது.

பெண் குழந்தைகள் :

3 1/2 - 4 வயது	-	அம்மானை பருவம்.
4 - 4 1/2 வயது	-	நீராடுதல் பருவம்
4 1/2 - 5 வயது	-	ஊஞ்சல் பருவம்.
மேலும் 1 முதல் 7 வயது	-	பேதை பருவம்
8 முதல் 12 வயது	-	பெதும்பை பருவம்
12 வயது 13 வயது	-	மங்கை பருவம்
14 வயது 19 வயது	-	மடந்தை பருவம்
20 வயது 25 வயது	-	அரிவை பருவம்
26 வயது 31வயது	-	தெரிவை பருவம்
32 வயது 40 வயது	-	பேரிளம் பெண் பருவம்

ஆண் குழந்தைகள் :

1 வயது குழந்தைகள்
1 வயது 5 வயது முள்ளை பருவம்.
5 வயது 11 வயது சிறுபருவம்
12 வயது 19 வயது வாலிப்பருவம்
19 வயது 40 யௌவனம்
40 வயது 80 வயது கௌமாரதிசை

மனிதனுக்கு ஆயுள் 100 வயது, அதனை 3 சமபாங்காக்கி.

இளமையில் (33 வருடம் நான்கு மாதம்)	-	ஐயகாலமும்
நடுபிராயம் (33 வருடம் நான்கு மாதம்)	-	பித்த காலமும்
இறுதி பிராயம் (33 வருடம் நான்கு மாதம்)	-	வாத காலமும், என வகுக்கப்பட்டுள்ளது.

1. இளமையில் : (33 வருடம் 4 மாதம்)

ஐயம் (கபம்) காலம் - கபசம்மதமான நோய்கள் உண்டாகும். சுரம், சன்னி, குரல்கம்மல், மூக்கடைப்பு, இரைப்பிருமல் போன்றவை

சுரம் : '' குடல் தன்னில் சீதமலாது சுரம் வராது''

சன்னி : ''தூங்கியே சிலேற்பன மிகுந்து பித்தமொன்றதாகில் ''

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

குரல்கம்மல் : உணவாதி செயல்களால் ஐயம் மிகுந்து மற்ற இருகுற்றங்களையும் கேடடைய செய்யும்
மூக்க டைப்பு : ஐயத்தை பெருக்க கூடிய உணாவாதி செயல்களால் ஐயம் பெருகி இந்நோய் பிறக்கும்.
இரைப்பிருமல் : உணவு வகையில் மிகுதியும் ஐயத்தை உண்டாக்கும் பொருட்களை உண்பதால் இந்நோய் உண்டாகும்.

2. நடுபிராயத்தில்:

பித்தகாலம் : குருதியழல் , தமரக நோய், வாந்தி , பாண்டு, பெருவயிறு, கழிச்சல், மூலம் , வெள்ளை.
வாந்தி : ''வளர்பித்த தீதலாது சத்தி (வாந்தி) வராது.''
மூலம் : ''அனிலபித்த தொந்தமலாது மூலம் வராது.''
மேகம்(வெள்ளை) : ''பகர்பித்த விந்தையலாது மேகம் வராதே.''

3. இறுதிபிராயம் :

வாதகாலம் : பக்கவாதம் சூலை வலிநோய்கள் வாதம் 80 வகைகள்
கீல்வாயு : ''மந்தமலாது வாயு வராது''
கரப்பான் : ''வாதமலாது மேனி கெடாது''
சூலை : ''நெடுவாத சார்வதுஷ்ன்றி சூலை வராது''

பருவங்களில் பொதுவாக உண்டாகும் நோய்கள்

நோய்கள் உண்டாகும் விதம் :

அக காரண நோய்கள் :

பெற்றோர்கள் உடல்நலை. காரணமாகவும் ஏற்படுவதுண்டு
கணம், மாந்தம், கரப்பான், தோடம், அக்கரம், கிரந்தி என்பன.

புறக்காரண நோய்கள் :

குழந்தை பிறந்த உடன் இது வரை இருந்த சூழ்நிலைக்கு புறம்பான முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலை. கருவில் இருந்து வெளி வந்த வருத்தம் காரணமாகவும் பல நோய்கள் ஏற்படுவதுண்டு.

1. பிறந்த உடன் சீறி சீறி அழுதல் 2. விக்கல் 3.பொருமல் 4. வயிறு வீங்கல் 5.பால்எதிரெடுத்தல் 6.கொட்டாவி 7. பால்குடியாமை 8. வயிறு நோய் 9.மலக்கட்டு 10. நீர்கட்டு 11.தோடம்

1.காப்பு பருவம் (1 - 6 மாதம்) புறக்காரண நோய்கள் உண்டாகும்

கிரந்தி (1 - 6 மாதம்) காப்பு பருவத்தில் உண்டாகும் நோய்.
2 வகை : கருங்கிரந்தி, செங்கிரந்தி

2. முத்தபருவம் (6 மாதம் 1 வருடம்) :

தோடம்

கையால் தொடுதல், கண்ணால் தொடுதல் ஊறால் தொடுதல் என்பன. முகத்தில் மிகவும் முக்கியமான கண் கண்ணால் பார்த்தல், நோய் கொண்ட பறவைகள் காற்று. குழந்தைகளின் மேல் அதிகாலைலோ முன்மாலை பொழுதிலோ படுமானால் தோட்டம் ஏற்படும்.

3. தாலாட்டுபருவம், முத்த சப்பாணி, வருகைப்பருவம் (1 - 3 ஆண்டுகள் வரை) :

மாந்தம் - குழந்தை பெற்ற தாய் உண்ணும் உணவின் சத்தை பொறுத்தே தாய் பாலின் தன்மையும் இருக்கும். குழந்தையின் வளர்ச்சிக்கு இடையூறு செய்யும் சிலபொருட்களை தாய் விலக்கவேண்டும். விலக்காமல் சேர்த்து கொண்டால் குழந்தையின் உடல்நிலை பாதிக்கும். குழந்தைகளுக்கு மாந்தம் ஏற்படும்.

4. எல்லா பருவங்களில் உண்டாகும் நோய்கள் 3 முதல் 7 ஆண்டுகள் :

கணம் எல்லா பருவங்களிலும் உண்டாகும் நோய் கணம். மாந்தம் தொடர் நோய் கணம். பாலும் குடித்து சோறும் உண்ணும் பருவத்தில் உண்டாகும். கணம் என்பது கர்ப்ப சூடு என்பர்.

5. எல்லா பருவங்களில் உண்டாகும் நோய்கள் : (வருகை முதல் , சிறுதேர்பருவம் வரை)

கரப்பான், உடலில் திமிர், தினவு, சொறிபுண், தடிப்பு, வெடிப்பு, நீர்கசிதல் ஆகிய குறி குணங்கள் உண்டாகி உடம்பின் இயற்கை நிறத்தை வேறுபடுத்தும்.

மனிதனின் ஆயுள் 100 ஆக இருந்தபோதும் இடையில் மரணம் உண்டாகின்றது. எதனால் என்றால்

1. தாயும் தந்தையும் தானும் செய்த பூர்வ சென்ம கன்ம வினைகள் :

பல நோய்கள் ருத்ரதோடம், கபமிகுந்து, கருவிகளால் வெட்டு குத்துகளாலும் விஷக்கடிகளாலும் மிருகங்களாலும், ஐந்துக்களின் பல்கடி விஷங்களாலும் நஞ்சின் விஷத்தாலும் விதியும் சேர்ந்து வயது குன்றி மரணம் உண்டாகின்றது. இதை அகால மரணம் என்பர்.

முடிவுரை :

இவற்றை தெரிந்து கொண்டு, நோய்கள் தங்களுக்கு வரும், காலம், உணவு பழக்க வழக்கங்கள், நோயில்லாமல் வாழும் வழிமுறைகள் ஒழுக்கங்கள் இவற்றை அனுசரித்து நல்லெண்ணத்துடன் வாழ்ந்தால் மனிதனின் ஆயுள்காலம் நூறு வயது வரை நிம்மதியாக சந்தோசத்துடன் இருக்கும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

DISEASE MANAGEMENT

TREATMENT OF OTRAI THALAIVALI (MIGRAINE)

Dr.NALINA SARASWATHI, B.S.M.S.
Asst. Lecturer
Department of Aruvai Maruthuvam
Govt. Siddha Medical College., Palayam kottai.

NAME : Eswari

AGE : 26 Yrs

SEX : Female

PRESENTING COMPLAINTS :

Right sided headache Vomiting - Pain right eyebrow, irritability and sleep disturbances since 2 years.

HISTORY OF TREATMENT :

Patient has taken allopathy treatment Pain subsides on treatment but reappeared again and again with increasing intensily and sleep disturbances.

FAMILY HISTORY :

No such family history

PERSONAL HISTORY :

Moderately built
Prakrithi - Pithavatha
Nadi - 70 / min
B.P - 120 / 70 mm Hg

TREATMENT :

Thirikaduhu Choornam
Sivanar Amirtham
Gowri Chinthamani Chenduram
Bramananda Bairavam Pills
Arakku thylam - bath

along with some Patents and Pranic healing done weekly twice for 3 months Patient had good improvement and the episodes became less frequent and vomiting stopped.

Finally she was put on Athimathura Choornam (Ref : Gunapadam part I)

PREPARATION :

Athimathuram, Sombu, Sarkarai - 35gm each. Bark of kodiueli root - 17gm

Bark of Kodiveli root - 17g.m.

Powdered and given for 3 months. All symptoms disappeared. Now for the past 2 months the patient never had even a single episode of head ache.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ROTARACT

Rotary means Rotation, Rotaract means Rotary in Action. But how will differ Rotaract from Rotary?

Rotary was first started at Chicogo (USA) in 1905 After that Rotaract was bounded from Rotary as a Rotary- sponsored service club for young men and women ages 18 to 30. Rotaract clubs are usually Community based (or) university based and are sponsored by local Rotary club, making them true "Partness in Service" and key members of the Rotary family.

Though the Rotaract programmes, young adults not only augment their knowledge and skills, but they also address the physical and social needs of their Communities while promoting international understanding and peace through a framework of friendship and service.

Each Rotaract club is required to undertake a minimum of two service projects annually; one to benefit its own community, the other to advance Rotary's goals understanding and peace.

CURRENT ROTARACT ACTIVITIES IN WORLD WIDE

Colombo :

The Rotaract club of Colombo metropolitan in Srilanka organised a fund - raising dance to provide disabled youth with scholarships for higher education.

Argentina:

Rotaractors from throughtout Argentina helped the Country's Ministry of Health implement a national public awareness Campaign to halt the deadly spread of AIDS.

Kenya :

The Rotaract club of Mombasa in kenya worked with UNICEF and government agencies to provide desperately needed food and clothing for homeless children.

Korea:

Rotaract clubs in Korea devised and implemented a nation wide anti-drug and anti-violence campaign aimed at teenage students in dangerous urban areas.

India : (Polio Eradication Programme)

On coming 2005 - India will announce Polio Eradication Country through world health organization.

In 2002 (Sep 19 and Nov 17) are polio drops Days then 2003 (Jan 5 and Feb 9) National polio pulse immunization programme. So that census of polio patients 1964 in 1998 reduced to 173 in 2002, among 149 patients only in uttar pradesh state. These programmes will be done with the help of Rotary and Rotarct clubs.

by

Dr.PP.Rtr.ß.Srimuganagalingam M.D(s̄)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கவிச்சோலை

இன்னும் கொஞ்சம்
சோகங்கள் வேண்டும்
உன் மடியில் சாய்ந்து அழ

- M.H.M. Devan IVth Oct.

இதுக்கு மேல சோகம் வந்தா
ஜென்ட்ஸ் ஹாஸ்டல் ம(ர)டியில
உக்காந்து அழ வேண்டியதுதான்...
வேற வழி...!

''நீ நீயாகவே இருக்க
நான் நானாகவே இருக்க
எவரால் இயலும்?
நம் இருவரின் இடைவெளியை குறைக்க''

''ஆறுதல் மட்டும் சொல்லத் தயாராயிரு என்னவளே
ஆயுள் முழுவதும் அழுது காட்டுகிறேன்.''

- WWW.143.Oct.com IIIrd oct.,

ஹி...ஹி ... வேற வழியில்ல.... இன்னும் ஒரு
வருஷந்தான் உங்க காலேஜ் லை.ஃப்

முயற்சி

இருள் வந்தது என்று கலங்காதே
மெழுகு வர்த்தியாய் இருக்க முயற்சி!
துன்பம் வந்தது என்று கலங்காதே - இதனை
துடைத்திட முயற்சி செய்!

By

து.கலைச்செல்வி
இரண்டாம் ஆண்டு - B.S.M.S

கேளுங்கள்! கேளுங்கள்!
கிளி ஜோசியம் கேளுங்கள்!
உங்களின் எதிர்காலத்தை அறிவதற்கல்ல
அந்த கிளியின் ஒரு நிமிட விடுதலைக்காக!

P.ஆர்த்தி Final BSMS (Oct)

ஆர்த்தி உங்களுக்கு
குசும்பு ஜாஸ்தி....

ஏற்கனவே
ஹோட்டல்ல டேபிள்
தொடச்ச
அனுபவம்
உண்டோ?

கவித்துளிகள்
விழித்ததும் ஆரம்பமாகிறது
உன் நினைவுகள்
உறங்கியதும் ஆரம்பமாகிறது
உன் கனவுகள்
தொடர்ச்சியாக நீ மட்டும்!

- Dinesh - III BSMS

ஒங்க ''அவுங்க'' என்ன மெகா சீரியல்
மகாதேவியா? தொடர்ச்சியா வர்றதுக்கு?

செருப்பு

எங்களுக்கும் உணர்வு உண்டு
சருகுகளை மிதித்தால் சப்தம் செய்கிறோம்
மலர்களை மிதித்தால் மௌனம் செய்கிறோம்.
வருந்தி

D.C.Jane Celia
III yr B.S.M.S.

அடிக்கடி மிதி வாங்கி பழக்கமோ?

மறைக்கூ...

கிராமங்கள் தான்
நாட்டின் முதுகெலும்பாம்
அதனால் தான் - யாரும்
திரும்பி பார்ப்பதில்லையோ?

- E.சரவணன்
II Yr BSMS (October Batch)

அடேங்கப்பா! பெரிய்ய .... கண்டுபிடிப்பை
கண்டுபிடிச்சிருக்கீங்க!

விதவை

உனக்கும் இல்லை திலகம்
உன் பெயர் உடைய பெண்ணுக்கும்
இல்லை திலகம்.

S.Rajesh III Year (Oct).

இன்னும் வேற ஏதாவது இருக்கா?
அவ்வளவுதானா?

சென்றது இனி மீளாது மூடரே, எப்போதும் சென்றதையே சிந்தனை செய்து மாளாதீர்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஒரு உண்மை மருத்துவன் சிந்திக்கிறான்

இருண்டு கிடந்த
இந்த இதழ் மருத்துவம்
விடிவதற்காகவும்....

பச்சையமில்லாத
மனிதத்தாவரங்கள்
ஒளிச்சேர்க்கை செய்யும்
உத்திகளை காணவும்...

சாட்சிகளில்லாத
உண்மை மருத்துவத்தில்
சாதனை படைக்கும்
அவசரத்தோடும்...

தன்
மருத்துவத்தை உயர்த்தி
பிடித்துவிட முடியாதா?...

என்று
சிந்தித்து கொண்டிருந்தான்
அன்று...

இனி...
மாந்தர்களின் செவிமடுக்க
மான்புமிகு இம்மருத்துவத்தின்
சித்தத்தை மனதில் வைத்து
சித்தத்தின் புகழ்பரப்பி விட...

புறப்படுவோம் நன் மருத்துவராய்
பொய்யான புருடர்களின்
உள்வேஷத்தை கலைத்து விட....

பொசுக் கென்று சித்தத்தின்
உண்மைதனை உலகறிய மலர்த்துவிட
புறப்படுவோம் நன் மருத்துவராய்....

அவன்
உண்மை மருத்துவன்
சிந்தித்து கொண்டிருக்கிறான்...

PRE - FINAL
T.VEERA MURAL
MANNAI

யாரு... நீங்களா? ....
உண்மை மருத்துவரா?
...ஹி...ஹி...



Art by
D.Kalaiselvi

நாளைக்காவது சொல்லிட வேண்டும்

இன்றைக்காவது சொல்லிடவேண்டும்
இன்பமயமான காதல் வேதனையை!

அவளை தென்றலாக அணுகி பனியாக கூறினேன்.
இதயத்தின் ஆசைகளையெல்லாம்,
தனியாக பேசியதையெல்லாம்,
அவளால் உருவான கவிதைகளையெல்லாம்,
விழித்திருந்த இரவுகளையெல்லாம் கூட கூறினேன்.

பூவாக கேட்டு கொண்டிருந்த அவள்
புன்னகையோடு ஏதோ சொல்ல முயன்றாள்...
சட்டென்று அதிர்ந்தேன்.
'சார் வந்துட்டாங்க' என்ற நண்பனின் குரல் கேட்டு,
கனவிலிருந்து மீண்டேன்.
அடச்சே... கனவிலும் கூட
அவளது பதில் தெரியவில்லையே!
இங்கே,
என் மனம் அலையாக தவித்து கொண்டிருக்கையில்,
அவள் மட்டும் அமைதியாக படித்து கொண்டிருந்தாள்.
என் இதயத்தின் அலறல்
எப்போது கேட்கபோகிறது அவளுக்கு?

நாளைக்காவது சொல்லிட வேண்டும்
நரகமயமான இந்த காதல் சுகத்தினை!

ஸ்ரீப்ரியன்
(III Year April Batch)

அந்த பொண்ணு கால்ல செருப்பில்லாதப்ப சொல்லுங்க.

College Code Words

Fanta - 'கலர்ஃபுல்' பிகர்.
Coke -Black beauty.
Spirit - வெட்டி பந்தா செய்பவள்
Pepsi - " Lipstick " பயன்படுத்துவாள்.
Mirinda - வலை விரிப்பவள்.
7up - சீறும் பெண்.
Rose Milk - குலுக்கல் பார்ட்டி.
Panner Soda - அதிகம் Scent பயன்படுத்துபவள்.
Zinger Soda - சிடு மூஞ்சி

= யாரோ = IV - BSMS

ஏன் கரெக்டா 9 வெரைட்டி எழுதி இருக்கீங்க?
யாரோ-ன்னா - அப்படீன்னு அர்த்தமா?
ம்... உங்களுக்கு ரொம்ப குசும்பு.....

அடுத்தவர்களுடைய எண்ணங்களுக்கு மதிப்பு கொடுங்கள். மதிக்காத இடத்தில் புத்திமதி கூறக்கூடாது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

'O' போடும் இன்றைய காதல்

JOhn என்ற பையன்
ROja என்ற பென்னை பார்த்தவுடன்
LOve என்ற காதல்
StOve போல் பற்றிக் கொள்ள
HOtஆக இருந்த அவன் இதயம்
Openஆகி போய்விட
அதில் அவள் DrOpஆக விழுந்து
PhOtO போல் பதிய
ShOck அடித்ததாய் உணர்ந்தான்.
ShOwவாய் அவள் நடக்கையில்
அவன் ShOeவாகி போக துடித்தான்
இரவில் அவன் தூக்கத்திலும்
Oயாமல் அவளின் நினைவுகள்
அவன் இதயத்தை KnOck செய்ய
LOck செய்ய முயன்றும் தோற்று போய்
ClOck இல்லாமலேயே விரைவாக எழுந்து
ClOse-up-னால் பல் தேய்த்து
Life buOy - யில் குளித்து
Tip TOp ஆக Dress போட்டு
HerO HOndaவில் Bus StOp சென்றான்
MOnday அன்று அவன் மனதை திறந்து
I LOve YOu என்று சொல்லி
ROse நீட்ட
அவன் ROja NO சொல்ல
WOrryஆகி போய் திரும்பினான்!
AutOவில் POojaவை பார்த்தவுடன்
JOllyஆகி அவளை FOllow பண்ணி
அந்த ROseஐ அவளுக்கு கொடுக்க
அவளும் NO சொன்னாள்
இதனால் JOhn என்ற
HerO ZerO வாகி போனான்!
இப்படிப்பட்ட
''மனம் விட்டு மனம் தாவும்
இன்றைய காதலுக்கு
' J ' போடலாமா?
' O 'போடலாமா?

by
WWW.OoZoma.Com
III B.S.M.S.



ஓ மட்டும் போட்டா போதாது.
ஓ-க்கு பக்கத்தில இன்னொரு
லெட்டர் சேர்த்து போடுங்க.



Art by
Rasheetha Banu
II B.S.M.S

உன்மையில் நான் கவிஞனல்ல
உன்மையில் நான் கவிஞனல்ல
கவிஞனாய் நானிருந்தால்
கவிதையால் படைத்திருப்பேன் காவியம் கன்னே! அதில்
காவியத் தலைவியாய் நீயிருப்பாய்;
கன்னிமைக்கும் பொழுதில் நீ
கவர்ந்து விட்டாய் என்னை!
காலங்கள் ஓடியும் மறையவில்லை,
காலச்சுவடுகளாய் உன்நினைவுகள்!
காலச்சுவடுகளை கவிதையாக்க முயற்சித்தேன்
முடியவில்லை - ஏனெனில்
உன்மையில் நான் கவிஞன் அல்ல!

C.Sakthi
IV B.S.M.S

நீங்க காலச்சுவடுகளை கவிதையாக்க
முயற்சிக்கவில்லை. ஏர்வாடி போறதுக்கு
முயற்சிக்கிறீங்க...

காதலித்துப் பார்

காதலித்துப் பார்
பூக்களில் மோதி மோதியே
உடைந்து போக உன்னால் முடியுமா?
